மாலை முரசு

பக்கங்கள் 19

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 24 செவ்வாய்க்கிழமை 09.01.2024 அதிர்வு 162

## உலகத் தமிழர் விழாவில் அதிதியாக மனோ எம்.பி.

**தமிழக அரசின் அழைப்பில் இன்று சென்னை பயணம்**

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இம்மாதம் 11, 12ஆம் திகதிகளில் சென்னையில் உலகத் தமிழர் 04

# கறுப்பு உடையில் சஜித் அணியினர்

வற் வரி திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கறுப்பு நிற ஆடை அணிந்து இன்றைய சபை அமர்வில் பங்கேற்றுள்ளனர்.

இந்த வருடத்துக்கான முதலாவது நாடாளுமன்றக் கூட்டத் தொடர் இன்று முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமானது.

இந்தநிலையில், அரசின் முறையற்ற வரிக் கொள்கை காரணமாக, நாட்டு மக்கள் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர் என்று சபையில் உரையாற்றிய சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் தெரிவித்துள்ளனர்.





### சஜித் கட்சியுடன் எந்தப் பிரச்சினையும் இல்லை; ஆனால்

# எம்.பி. பதவியைத் துறந்து

# சமிந்த விஜேசிறி அதிரடி

### மக்கள் கோரும் நாடாளுமன்றம் அமைய தேர்தல் வேண்டும் என்றும் வலியுறுத்து

ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் திடீரென இராஜிநாமா செய்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று விசேட உரையொன்றை நிகழ்த்திய அவர், எம்.பி. பதவியைத் துறப்பதாக அறிவித்தார்.

பதவி விலகல் கடிதம் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவிடமும், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

"மக்கள் கோரும் நாடாளுமன்றம் அமைய தேர்தல் நடத்தப்பட வேண்டும். கட்சியுடன் எனக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. ஒரு தந்தை போலவே கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ என்னை வழி நடத்தினார்" - என்றும் அவர் குறிப்பிட்டார்.

"ஐக்கிய மக்கள் சக்திதான் எனது கட்சி. சஜித்தான் நாட்டைச் சிறப்பாக நிர்வகிக்கக் கூடியவர். 04



# மலையகத்தில் முதலீடு செய்யுங்கள்!

## இந்திய தமிழ் வம்சாவளியினரிடம் ராதா எம்.பி. கோரிக்கை

"இந்திய தமிழ் வம்சாவளியினர் மலையகத்தில் முதலீடுகளைச் செய்ய முன்வர வேண்டும்" – என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இராதா கிருஷ்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் ஏற்பாட்டில சென்னையில் நடைபெற்ற சர்வதேச வர்த்தக மாநாட்டின் நிறைவு நாளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இராதாகிருஷ்ணன் எம்.பி. இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

இந்த மாநாட்டுக்கு உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவர் ஜே.செல்வகுமார் தலைமை தாங்கினார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றி இராதாகிருஷ்ணன் எம்.பி. மேலும் கூறியதாவது:–

"இலங்கையின் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலைமைக்குச் சென்றபோது அதனை மீளக் கட்டியெழுப்புவதற்கு அதிக பங்களிப்பைச் செய்த நாடு இந்தியா என்பதை யாரும் மறுக்க முடியாது. எனவே, எங்களுடைய இந்திய வம்சாவளி தமிழர்கள் அனைத்து நாடுகளிலும் பறந்து வாழ்கின்றார்கள். அவர்களில் அநேகமானவர்கள் இன்று பொருளாதார ரீதியாக உயர்ந்த இடத்தில் இருக்கின்றார்கள். எனவே, அவர்கள் அனைவரும் இலங்கையில் முதலீடு செய்வதற்கு முன் வர வேண்டும்.

அப்படி முதலீடு செய்வதற்கு முன் வருகின்றவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு நான் தயாராக இருக்கின்றேன். குறிப்பாக இலங்கையின் மலையகப் பகுதிகளில் அதாவது அதிகமாக இந்திய வம்சாவளித் தமிழர்கள் செறிந்து வாழுகின்ற பிரதேசங்களில் தங்களுடைய முதலீடுகளைச் செய்ய முன்வருவார்களானால் எங்களுடைய மக்களுடைய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அது ஓர் உந்து சந்தியாக அமையும்.

இலங்கையில் எங்களுடைய மலையக இளைஞர், யுவதிகளுக்கு அனைத்துத் திறமைகளும் உள்ளன. ஆனால், அவர்களுக்குச் சந்தர்ப்பம் என்பது மிகவும் குறைவாகவே இருக்கின்றது. பொருளாதார ரீதியாக நாங்கள் பின்னடைந்தவர்களாகவே இருக்கின்றோம். எங்களுடைய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு இங்குள்ள அதாவது இந்த மாநாட்டில் பங்குபற்றியுள்ள முதலீட்டாளர்கள் முன்வருவார்களானால் அது இந்த மாநாட்டுக்குக் கிடைத்த ஒரு வெற்றியாக நான் கருதுகின்றேன்." – என்றார்.

# வீட்டின் மீது வீழ்ந்தது பாரவூர்தி 6 வயது சிறுவன் பரிதாபப் பலி!

## தரம் ஒன்றில் நேற்று இணையவிருந்த வேளை விபரீதம்

லொறியொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீடொன்றின் மீது வீழ்ந்ததில் 6 வயது சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் களுத்துறை, தினியாவல பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

பெலவத்தையில் இருந்து நெலுவ நோக்கிப் பயணித்த கொழுந்து லொறி வேகக் கட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த வீடொன்றின் மீது வீழ்ந்துள்ளது.

இதன்போது, வீட்டின் வாசலில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் வீழ்ந்த லொறிக்குள் சிக்கியுள்ளார்.

படுகாயமடைந்த சிறுவன் உடனடியாக மீகஹதென்ன வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

லொறியின் சாரதி மற்றும் உதவியாளரும் படுகாயமடைந்த நிலையில் எல்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

உயிரிழந்த மேற்படி சிறுவன் சர்வதேச பாடசாலையொன்றில் தரம் ஒன்றில் நேற்று இணையவிருந்தார். எனினும், துரதிஷ்டவசமாக விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தினியாவல பிரதேசத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

விபத்து தொடர்பில் தினியாவல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# ‘தமிழீழம்’ என்ற கனவை நனவாக்க பிக்குகளின் ஆதரவைப் பெறச் சதி!

## உலகத் தமிழர் பேரவைக்கு எதிராக குணதாஸ அமரசேகர போர்க்கொடி



“பௌத்த பிக்குகளே இந்நாட்டில் ஒற்றையாட்சியின் காவலர்களாக இருந்து வருகின்றனர். இலங்கை சமஷ்டி நாடாவது அவர்களின் அழுத்தத்தால்தான் தடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையிலேயே தமிழ்ப் பிரிவினைவாதிகள் தற்போது பிக்குகளின் ஆதரவைப் பெறும் சூழ்ச்சி நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.”

– இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாஸ அமரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

“நாடு பயங்கரமான நிலையை எதிர்கொண்டுள்ளது. இதற்கு முன்னர் இவ்வாறானதொரு நிலைமையை எதிர்கொள்ளவில்லை. ஜனாதிபதியின் படமொன்று அண்மையில் ஊடகத்தில் வெளியானது. ஒரு புறத்தில் பிக்குகள் எனக் கூறிக்கொள்ளும் சிலர் இருந்தனர். மறுபுறத்தில் உலகத் தமிழர் பேரவை உறுப்பினர்கள் இருந்துள்ளனர்.

இமயமலைப் பிரகடனம் எனக் கூறி பிரகடனமொன்று வெளியிடப்பட்டுள்ளது. அதில் ஆறு யோசனைகள் உள்ளன. இலங்கையைப் பெரடல் நாடாக்கி, அதன்மூலம் தமிழீழத்தை அடைவதே அதன் நோக்கமாகும்.

ஜனாதிபதியைச் சந்தித்த பின்னர் மகாநாயக்க தேரர்களையும் அவர்கள் சந்தித்துள்ளனர். அரசியல் கட்சிகளின் தலைவர்களுடனும் பேச்சு நடத்தியுள்ளனர். அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் இமயமலைப் பிரகடனத்துக்கு இணக்கம் என்ற தகவலைத் தற்போது அவர்கள் பரப்பி வருகின்றனர்.

தமிழ்ப் பிரிவினைவாதிகளின் தேவைக்கேற்ப இந்த நாடு பெடரல் நாடாக மாறாமல் இருப்பதற்குப் பிக்குகள் சமூகமே காரணம். நாட்டை அவர்கள் பாதுகாத்து வருகின்றனர். நாடு பிளவுபடுவதற்கு எதிராக மகாசங்கத்தினரே செயற்பட்டனர். ஒற்றையாட்சியைக் காக்க அவர்கள் பெரும் அர்ப்பணிப்புகளைச் செய்துள்ளனர். மன்னர் காலத்திலும் அவ்வாறு நடந்துள்ளது.

13 ஆவது முழுமையாக அமுல்படுத்த முடியாமல் இருப்பதற்கும் பிக்குகள் அழுத்தம் காரணம். இதனைத் தெரிந்துதான் பிக்கு சமூகம் தற்போது இலக்கு வைக்கப்பட்டுள்ளது. அதற்காகவே பிக்கு சமூகத்தின் ஆதரவைப் பெறும் முயற்சியில் இறங்கியுள்ளனர். இந்த இமயமலைப் பிரகடனத்துக்கு இணங்கக்கூடாது.” – என்றார்.

# சமிந்த விஜேசிறியின் இடத்துக்கு நயன வாசலதிலக

ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி பதவி விலகியதையடுத்து வெற்றிடமாகியுள்ள எம்.பி. பதவிக்கு நயன வாசலதிலக நியமிக்கப்படவுள்ளார்.

அவர் கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி 31 ஆயிரத்து 307 வாக்குகளைப் பெற்றிருந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த சமிந்த விஜேசிறி நாடாளுமன்றத்தில் இன்று விசேட அறிக்கை ஒன்றை விடுத்து தனது எம்.பி. பதவியை இராஜிநாமா செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





வவுனியா - வீரபுரத்தில் காணாமல்போன

# கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் கல்குவாரி குழியில் சடலமாக மீட்பு!





**(கி.வசந்தரூபன்)**

வவுனியா - வீரபுரத்தில் உள்ள கல்குவாரி ஒன்றில் இருந்து கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, வீரபுரம் பகுதியில் வசித்து வந்த மேற்படி நபர் கால்நடை வளர்ப்பு மற்றும் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தார். இந்நிலையில், அவர் கடந்த சனிக்கிழமை முதல் காணாமல்போன நிலையிலே நேற்று திங்கட்கிழமை மாலை விவசாய செய்கையை மேற்கொள்ளும் காணிக்கு அருகில் உள்ள கல்குவாரி குழியில் உள்ள நீரில் மிதந்த நிலையில் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டார்.

இதையடுத்து, சடலம் செட்டிகுளம் பொலிஸாரால் நேற்று இரவு மீட்கப்பட்டது.

சடலத்தைத் திடீர் மரண விசாரணை அதிகாரி க.ஹரிபிரசாத் பார்வையிட்டிருந்தார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான சுப்பையா மருதன் என்ற 78 வயதுடைய வயோதிபரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### எம்.பி. தபவியை...

மக்கள் விரும்பினால் மீண்டும் அரசியலுக்கு வருவேன்" - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சமிந்த விஜேசிறி எம்.பியின் இராஜிநாமாக் கடிதத்துக்கமைய, 1981ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64 (1) ஆம் பிரிவின் பிரகாரம் ஒன்பதாவது நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறியின் ஆசனம் வெற்றிடமாகியுள்ளது என்று நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தால் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது 43 வயதான சமிந்த விஜேசிறி, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் (2020) பதுளை மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியிலிருந்து கடந்த தேர்தலில் பதுளை மாவட்டத்திலிருந்து 3 பேர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியிருந்தனர்.

வடிவேல் சுரேஷ், அ.அரவிந்தகுமார், சமிந்த விஜேசிறி ஆகியோரே அந்தத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் பதுளையிலிருந்து தெரிவாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### உலகத் தமிழர்...

விழா நடைபெறவுள்ளது.

இந்த விழாவில், தமிழக அரசின் அழைப்பையேற்றுக் கலந்துகொள்வதற்காகத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் இன்று சென்னைக்குப் பயணித்துள்ளார்.



# 50 மில்லியன் ரூபா பெறுமதியான மாணிக்கத்துடன் சீனத் தம்பதி கைது!

50 மில்லியன் ரூபா பெறுமதியான மாணிக்கக் கற்களுடன் இலங்கையை விட்டு வெளியேற முற்பட்ட சீன தம்பதியினர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அதிரடியாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் மாணிக்கக் கற்களுடன் நாட்டை விட்டு வெளியேற முயற்சித்த நிலையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்கடம் இருந்து 175 மாணிக்கக் கற்கள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றின் பெறுமதி 50 மில்லியன் ரூபாவை அண்மித்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாணிக்கக் கற்களுடன் கைது செய்யப்பட்ட சீனத் தம்பதி மேலதிக விசாரணைகளுக்காக இலங்கை சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செங்கடலில் பாதுகாப்பு வழங்காவிட்டால் இலங்கைத் துறைமுகங்களுக்கு ஆபத்து!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



செங்கடல் ஊடாக இலங்கைக்கு வரும் சரக்குக் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படாவிட்டால் கொழும்பு உள்ளிட்ட இலங்கை துறைமுகங்களுக்கு பாரிய அச்சுறுத்தலும் ஆபத்தும் ஏற்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

மகா பராக்கிரமபாகுவின் ஆட்சியின் பின்னர் சர்வதேச கடற்பரப்பைப் பாதுகாக்க இலங்கையில் இருந்து கப்பல்கள் அனுப்பப்படுவது இதுவே முதல் தடவை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் கப்பலைச் செங்கடலில் நிறுத்தி அந்த நடவடிக்கைகளில் ஆகும் செலவைப் பார்க்கும் போது, கப்பல்கள் இலங்கைக்கு வராது விட்டால் நாடு பாரிய பொருளாதார இழப்பை சந்திக்கும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஹவுத்தி அமைப்பினரின் அச்சுறுத் தலை அடுத்து பல கப்பல்கள் செங் கடலைக் கடந்து வேறு வழித்தடங்களில் செல்வதால் போக்குவரத்துக் கட்டணங் களும் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதன் பாதுகாப்புக்காக கப்பல் ஒன்றைச் செங்கடலுக்கு அனுப்ப இலங்கைக் கடற்படை இணங்கியுள்ளது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## இது விபரீத வேலை!

தேவை ஏதும் இல்லாமல் மத்திய கிழக்கு யுத்தத்தில் ஒரு தரப்பாக இலங்கை தேசத்தையும் கொண்டு போய் மாட்டுகின்ற வேலையைச் செய்ய முற்படுகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

சர்வதேச இராஜதந்திர தொடர்பாடல் விடயங்களில் பெரும் முட்டாள்தனமான காரியத்தை செய்ய விழைகின்றார் இலங்கை ஜனாதிபதி என்றே தோன்றுகின்றது.

செங்கடலைப் பாதுகாத்தல் என்ற பெயரில் அமெரிக்க நேசக் கூட்டணி ஆரம்பிக்க முற்பட்டிருக்கும் பாதுகாப்பு நடவடிக்கையில் இலங்கைக் கடற்படையையும் இணைத்துக் கொள்ள முற்படுவதன் மூலம் நெருப்புடன் விளையாடும் சீண்டலை ஆரம்பித்திருக்கின்றார் இலங்கை ஜனாதிபதி என்று படுகின்றது. செங்கடல் ஊடான கடல் போக்குவரத்து ஹவுதி கிளர்ச்சியாளர்களின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளான நிலையில், செங்கடலைப் பாதுகாப்பதற்குத் தமது கூட்டணியில் இணைந்து செயற்பட முன்வருமாறு இலங்கைக்கு அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ளது. இந்த அழைப்புக்கு இலங்கை சாதகமான பிரதிபலிப்பை காட்டி இருப்பது பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புக்கு அமைய செங்கடல் மற்றும் அதனை அண்டிய பிராந்தியத்திற்கு இலங்கைக் கடற்படைகளின் கப்பல்களை அனுப்பி வைக்க இலங்கைக் கடற்படை தயார் என்று அதன் ஊடகப் பேச்சாளர் கப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்திருக்கிறார்.

செங்கடல் சர்ச்சை - பாலஸ்தீனத்தின் காசா மீது இஸ்ரேல் மேற்கொண்டிருக்கும் கொடூரமான ஆக்கிரமிப்பு யுத்தத்தின் பிரதிபலிப்பு. இதுவரை காலமும் சர்வதேச விடயங்களில் பெரும்பாலும் அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடித்த வருவதாக கூறும் இலங்கை, இந்த விடயத்தில் அந்த கோட்பாட்டில் இருந்து விலகி, அமெரிக்க - இஸ்ரேல் கூட்டணி பக்கம் சாயத் தீர்மானிக்கின்றது. இது இலங்கைத் தீவின் முக்கிய சிறுபான்மையினரான முஸ்லிம்களைச் சீண்டிப் பார்க்கும் கொழும்பு அரசின் எத்தனமும் கூட.

காசா மீதான இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு எதிரான பதிலடியே செங்கடல் தாக்குதல் என்று ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

‘‘காசாவிற்குத் தேவையான உணவு மற்றும் மருந்துகள் விநியோகிக்கப்படாவிட்டால் செங்கடல் வழியாக இஸ்ரேல் துறைமுகங்களுக்கு செல்லும் அனைத்துக் கப்பல்களும் - அவை எந்த நாட்டைச் சேர்ந்தவையாக இருந்தாலும் - அவற்றின் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று ஹவுதி இராணுவச்செய்தித் தொடர்பாளர் ஒரு வீடியோ அறிக்கையில் தெளிவுபடுத்தி இருக்கிறார்.

ஆகவே செங்கடலில் கப்பல்களின் மீதான ஹவுதிகளின் அச்சுறுத்தலைக் களைவதற்கு அமெரிக்காவை ஆக்கபூர்வமாக நடவடிக்கை எடுக்கத் தூண்ட வேண்டுமே தவிர, அமெரிக்காவுடன் சேர்ந்து இராணுவ அணியில் - இராணுவ நடவடிக்கைகளில் - இணைந்து கொள்ளக் கூடாது.

காசா மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு மற்றும் பேரழிவு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தினால் -

இஸ்ரேலின் வன்முறை நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட காசாவின் பாலஸ்தீனியர்களுக்கு உரிய மனிதாபிமான உதவிகள் சென்றடைகின்றமையை உறுதிப்படுத்தினால் -

செங்கடல் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களை நிறுத்தச் செய்யலாம்.

செங்கடலுக்கு இலங்கைக் கடற்படையை அனுப்பி, பாலஸ்தீனியர்களுக்கும் அவர்களுக்காக அவர்களின் சகோதரர்கள் போல இங்கு குரல் எழுப்பும் நமது முஸ்லிம் சகோதர, சகோதரிகளுக்கும் எதிரான நிலைப்பாட்டை இலங்கை எடுக்கக் கூடாது.

வீண் வம்பையும் குழப்பங்களையும் தேடி விலைக்கு வாங்கும் வேலையே அமெரிக்கக் கூட்டணியுடன் சேர்ந்து நேரடிப் படை நடவடிக்கைகளில் இலங்கை இறங்குவது.



# ஹெரோயின் போதைப் பொருளுடன் ஆலய அர்ச்சகர் ஒருவர் கைதானார்!


ஆலய அர்ச்சகர் ஒருவர் 3 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

யுத்திய நடவடிக்கை காரணமாக தெஹிவளை மற்றும் இரத்மலானை பிரதேசங்களில் இருந்து தப்பிச் சென்ற நிலையில் வலான ஊழல் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் ஹொரண சுனாமிவத்த பிரதேசத்தில் ஆலயம் ஒன்றில் பூசகராக பணியாற்றி வந்துள்ளார்.

சந்தேகநபர் அந்த ஆலயத்தில், 1500 ரூபாவுக்கு ஜாதகம் பார்த்து வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபருடன் சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளை வலான ஊழல் தடுப்பு பிரிவினர் மீட்டுள்ளனர்.



# பொலிஸாரின் யுக்திய நடவடிக்கை; 20 நாள்களில் 28,520 பேர் கைது!

பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வரும் யுக்திய தேடுதல் நடவடிக்கையின் மூலம் இதுவரையில் 28 ஆயிரத்து 520 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த இருபது நாள்களில் இவ்வாறு பெரும் எண்ணிக்கையிலானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

போதைப் பொருள் கடத்தல், போதைப் பொருள் பயன்பாடு மற்றும் ஏனைய குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டனர் என்று குற்றம் சுமத்தப்பட்டு 2 ஆயிரத்து 303 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஆயிரத்து 434 பேர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். ஏனையவர்கள் புனர் வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சோதனை நடவடிக்கைகளின் மூலம் 70 கிலோ கிராம் ஹெரோயின், 200 கிலோ ஐஸ் போதைப் பொருள், 340 கிலோ கிராம் கஞ்சா, 79 ஆயிரத்து 147 போதை மாத்திரைகள் என்பன உள்ளிட்ட பெருந்தொகைப் போதைப் பொருள்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை இந்த யுக்திய நடவடிக்கைகளின் போது மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்று பொலிஸார் மீது பல்வேறு தரப்பினரும் குற்றம் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் ஒருவர் கைது!



உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


தெஹியந்தர பொலிஸ் நிலையப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில், ரதாவெல, தெய்ந்தர பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்று (08) மாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரின் வீடு மற்றும் விற்பனை நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, 13 தோட்டாக்கள் மற்றும் வெற்று தோட்டாக்கள் 06 என்பன மீட்கப்பட்டுள்ளன.

மேலும், 05 லீற்றர் 750 மில்லி லீற்றர் சட்டவிரோத மதுபானம், 45 கஞ்சா கலந்த போதை மாத்திரைகள், 01 தந்தம், 324 கிராம் வெடி மருந்து, 01 ஹக்கபட்டாஸ், 03 மான் கொம்புகள், 04 கிலோகிராம் காட்டுப்பன்றி இறைச்சி, 1,600 சீனப்பட்டாசுகள் என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டன. கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 36 வயதானவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இலங்கை வரவுள்ளார் ஜப்பான் நிதியமைச்சர்




ஜப்பான் நிதியமைச்சர் சுசுகி ஷுனிச்சி இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இதன்படி, எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை அவர் இலங்கை அரசின் முக்கிய தரப்பினரை சந்திக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின் போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோருடன் அவர் இரு தரப்புப் பேச்சுகளை முன்னெடுக்கவுள்ளார்.

ஜப்பானுக்கான இலங்கை தூதுவர் சுசுகி ஷுனிச்சியின் இந்த விஜயத்துக்கு முன்பாக, ஜப்பானுக்கான இலங்கை தூதுவர் ரொட்னி எம். பெரேராவை, டோக்கியோவில் உள்ள நிதி அமைச்சில் சந்தித்துள்ளார்.

இலங்கைக்கான விஜயம் தொடர்பில் இதன் போது, ரொட்னி எம். பெரேரா, சுசுகி ஷுனிச்சிக்குக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

ஜப்பான் நிதி அமைச்சர் மற்றும் அவரது குழுவினரின் இலங்கைக்கான விஜயத்தின் போது, இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் நாடாளுமன்றம், ஜயவர்தன மையம், ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனை, கொழும்பு கப்பல்துறை உள்ளிட்ட சில முக்கிய இடங்களுக்கு பயணம் செய்யவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெள்ளவத்தையில் மாடியிலிருந்து வீழ்ந்த குடும்பப் பெண் உயிரிழப்பு!



வெள்ளவத்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்பில் இருந்து வீழ்ந்து பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு – 6 பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் ஒரு பிள்ளையின் தாயார் என்றும் அவரது கணவர் நேற்று முன்தினம் தனிப்பட்ட தொழில் நிமித்தம் யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருந்த நிலையில் இந்த முடிவை எடுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தன்று மகன் வீட்டில் படித்துக் கொண்டிருந்த போது வீட்டில் இருந்த நாற்காலியை எடுத்துக்கொண்டு கட்டடத்தின் 8 ஆவது மாடிக்கு சென்று அதிலிருந்து குதித்துள்ளார் என்று விசாரணையில் தெரியவந்தது.

உயிரிழந்த பெண் மனநலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலம் களுபோவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுட. வெள்ளவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கல்விசாரா பணியாளருக்கு மணிவிழா

கோப்பாய் மற்றும் பலாலி ஆசிரியர் கலாசாலைகளில் நாற்பது வருடங்கள் கற்பித்தல் சாரா பணியாளராகச் சேவையாற்றிய சீவரத்தினம் தங்கவேலின் பணி ஓய்வை முன்னிட்டு மணிவிழா நிகழ்வு நேற்று (08) கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெற்றது.

கலாசாலையின் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் வதனி கேதாரநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி கலாநிதி சுப்ரமணியம் பரமானந்தம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வாழ்த்துரைகளை வழங்கினர்.






# அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன!

நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வற் வரி அதிகரிப்பினால் அத்தியாவசிய நுகர்வுப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன நுகர்வோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அதற்கமைய, உருளைக்கிழங்கு, பருப்பு, சீனி, வெங்காயம், கோதுமை மா மற்றும் சில அரிசி வகைகளின் விலைகள் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

வற் வரி உயர்வுக்கு முன்னர் 300 ரூபாவாக இருந்த ஒரு கிலோ பருப்பின் விலை தற்போது 350 ரூபாவாக அதிகரித்துள்ளது.

மேலும் சில பகுதிகளில் 290 ரூபாவாக இருந்த ஒரு கிலோ சீனியின் விலை 320 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது.

வற் வரி என்ற போர்வையில் சில வர்த்தகர்கள் கட்டுப்பாடற்ற வகையில் பொருள்களின் விலைகளை அதிகரித்துள்ளனர் என்று நுகர்வோர் குற்றம் சாட்டியுள்ளனர்.



# மன்னார் மீனவர், மக்கள் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி உரிய தீர்வை வழங்க வேண்டும்

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடக பேச்சாளர் ஆலம் தெரிவிப்பு

(மன்னார் நிருபர்)

மன்னார் மீனவர்கள் மற்றும் மக்களது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை ஜனாதிபதி வழங்க வேண்டும்.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் வடக்குக்கான விஜயத்தின் போது மன்னார் மாவட்ட மீனவர்கள் உள்ளடங்கலாக மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் தொடர்பான மகஜர் ஒன்றை கையளிக்க முயற்சித்த போதும் மகஜரைக் கையளிக்க முடியவில்லை.

வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடக பேச்சாளர் என்.எம்.ஆலம் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று திங்கட்கிழமை (08) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் வடக்குக்கான விஜயத்தின் போது மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாட எங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் கலந்து கொண்டிருந்தோம்.கடல் தொழில் சார்பாக கலந்துரையாட நீண்ட நேரம் ஒதுக்கித் தரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும் கலந்துரையாடல் தொடர்பான நிகழ்ச்சி நிரல் மாற்றப்பட்டிருந்தது.

இதனால் எமது கோரிக்கைகளை முன்வைக்க முடியாத நிலை ஏற்பட்டது.

ஜனாதிபதியிடம் முன்வைக்க முனைந்த கோரிக்கைகளை ஊடகங்கள் ஊடாக வெளிக்கொண்டு வருகின்றோம்.

1. இந்திய இழுவைப் படகுகள் தொடர்பாக – ஆயிரக் கணக்கான இந்திய இழுவைப் படகுகள் எமது வாழ்வாதாரம் அடியோடு அற்றுப் போகும் படியாக எமது கரைக்கு மிக அருகாமையில் (சுமார் 500 மீற்றர் தொலைவில்) வந்து மீன்பிடி நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் எமது தொழில் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளத. கடல் வளம் அறவே அற்றுப் போய் விடும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே 2016 ஆம் ஆண்டு டில்லியில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு மட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானத்தை செயல்படுத்துவதே இதற்கு தீர்வாக அமையும்.

2. இல்மனைட் மண் அகழ்வு – மன்னார் தீவில் இல்மனைட் மண் அகழ்வானது மக்கள் மற்றும் அதிகாரிகளுக்கு தெரியாமல் இடம்பெறுவது பாரதுரமான ஒன்றாகும். அந்தத் திட்டம் செயற்படுத்தப்படுமாயின் மன்னார் தீவில் வாழும் மீனவர்கள் தங்கள் வாழிடங்களை இழந்து இந்தப் பிரதேசத்தை விட்டு வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தோன்றும் என்பது உறுதியாகும்.

3. சட்டவிரோத மீன்பிடி முறைகளை முற்றாக நிறுத்துவதற்கு அதிகாரிகளை பணித்தல் – மாவட்டத்தில் இந்தச் சட்டவிரோத மீன்பிடியானது இந்திய மீனவர்களின் வருகையைக் காரணம் காட்டி எமது மீனவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.




எனவே அதனை முற்றாக நிறுத்துவதற்கு அதிகாரிகளைப் பணிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

4. காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் – காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்துக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல. இருப்பினும் மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் கடற்கரைப் பகுதிகளுக்கு மிக அண்மையில் அமைக்கப்பட்டுள்ள காற்றாலை கோபுரங்களால் மீன்பிடி வெகுவாகப் பாதிப்படைந்துள்ளது.

காற்றாலையானது மீன் பரம்பல் மீது ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பாக எவ்விதமான விஞ்ஞான ஆதாரங்களும் இதுவரையில் வெளியிடப்படவில்லை. எனினும் காற்றாலைகள் அமைக்கப்பட்டதன் பின்னர் மீன்பிடி வெகுவாக நலிவடைந்துள்ளது என்று மீனவர்கள் தங்கள் அனுபவரீயில் கூறி நிற்கின்றனர்.

இது தொடர்பாக விரிவுரையாளர்கள் குழாமொன்று மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டு ஆய்வு செய்ததில், கடல் நீர் ஓடைகள் (கண்டல் தாவரங்கள்) சிதைக்கப்பட்டதும் கடற்கரையோரமாக பாதை அமைக்கப்பட்டதும் மீன்களின் பெருக்கத்தைப் பாதித்துள்ளன என்று குறிப்பிட்டிருந்தது.

அத்துடன் அதை விட புதிய 100 காற்றாலை கோபுரங்கள் அமைக்கப்படுவதற்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். வாழ்விடங்களும் சிதைக்கப்படும் அவல நிலை தோன்றியுள்ளது. எனவே தீவுப் பகுதியை தவிர்த்து இந்தத் திட்டத்தை செயல்படுத்துமாறு மீனவ சமூகம் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

5.இழந்த மீன்பிடி உபகரணங்களுக்கான நஷ்டஈடு – எமது மாவட்டத்தில் மீனவர்கள் இயற்கை சீற்றங்களாலுல், இந்திய இழுவைப் படகுகளாலும் தமது மீன்பிடி உபகரணங்களை இழந்து விடுகின்ற பல சந்தர்ப்பங்கள் தொடர்ந்து ஏற்படுகின்றன.

இவற்றால் பாதிப்புக்குள்ளாகும் ஏழை மீனவர்களுக்கு எவ்வித நஷ்ட ஈடுகளும் வழங்கப்படுவதில்லை என்பது மிகுந்த வருத்தத்துக்கு உரியது. எனவே இந்த மீனவர்களின் வாழ்வாதாரம் முடங்கிப்போய் விடாது அவர்களுக்கு இழப்பீடானது உரிய காலத்தில் வழங்கப்படுதல் வேண்டும்.

6. இறால், மற்றும் அட்டைப் பண்ணைகளால் சுற்றுச் சூழலுக்கு ஏற்படும் தீங்கு – எமது மாவட்டத்தில் ஆங்காங்கே பரவலாக அட்டைப் பண்ணைகளும் இறால் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அவற்றிலிருந்து வெளியேற்றப்படும் இரசாயனக் கழிவு நீரால் சுற்றுச் சூழல் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது. அந்நீரை அருந்தும் கால்நடைகளும் இறந்து வருகின்றன. அந்த நீர் கலக்கும் இடங்களில் மீன்கள் தொகையாக செத்து மடிவது கண்கூடாகக் காணக் கூடியதாக உள்ளது.

தற்போது எமது மாவட்ட மீனவர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளை ஜனாதிபதியின் மேலான கவனத்துக்குத் தெரிவித்து நிற்கின்றோம். ஜனாதிபதி இந்த விடயங்களைக் கண்ணுற்று எமது மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான உரிய தீர்வுகளை பெற்றுத்தர வேண்டும்.– என்று தெரிவித்துள்ளார்.

# வடக்கு மாகாணத்தில் எரிசக்தி வாய்ப்பு: உள்ளது என்கிறார் எரிக் சொல்ஹெய்ம்!



இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன என்று இலங்கைக்கான, நோர்வேயின் முன்னாள் சமாதானப் பேச்சு ஏற்பாட்டாளர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகப்பதிவு ஒன்றில் இதனைக் குறிப்பிட்டுள்ள அவர், போரால் வட இலங்கை மிகவும் பாதிக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் இப்போது வடக்கு மாகாணத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கும், பசுமை ஹைட்ரஜன் மற்றும் பச்சை அம்மோனியாவுக்கும் ஏராளமான வாய்ப்புகள் உள்ளன என்று தெரிவித்துள்ளார்.

சொல்ஹெய்ம் தற்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சர்வதேச காலநிலை ஆலோசகராகச் செயற்படும் நிலையிலேயே இந்தக் கருத்துக்களைப் பகிர்ந்துள்ளார்.

இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் காற்றாலை மின்சாரம் ஆகியவற்றுக்கான அற்புதமான சாத்தியக்கூறுகள் உள்ளன.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள மிக ஆழமற்ற கடல் காற்றுக்கு மிகவும் பொருத்தமானது. சூரிய சக்திக்கும் பொருத்தமான இடமாக இலங்கை உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை முன்வைப்பதற்காக தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் அரசுக்கும் இடையில் தான் மத்தியஸ்தராக செயற்படுகிறார் என்று கூறப்படும் கூற்றை சொல்ஹெய்ம் நிராகரித்துள்ளார்.

## எந்தவொரு அரசியல் தலைவரும்

# லசந்தவுக்கு நீதி வழங்கவில்லை; இது வெட்கக்கேடான செயலாகும்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

இன்றைக்கு 15 வருடங்களுக்கு முன்னர் மிலேச்சத்தனமாக, அரச பயங்கரவாதத்தின் மூலம் மிகக் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவுக்கு நீதி வழங்குவோம், லசந்த விக்ரமதுங்கவின் கொலையாளிகளை கண்டறிவோம் என்று கடந்த சில வருடங்களாக அனைத்துத் தேர்தல்களின் போதும் பல்வேறு அரசியல்வாதிகள் வாக்குறுதியளித்திருந்தனர். இருந்த போதிலும், இந்த எந்தவொரு அரசியல் தலைவர்களும் லசந்த விக்ரமதுங்கவுக்கும் அன்னாரது குடும்பத்துக்கும் ஜனநாயகத்தின் பெயராலும், தமது கடமையை நிறைவேற்றவில்லை. இது வெட்கக்கேடான செயலாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் 15 ஆவது நினைவு தினம் நேற்று (08) அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,



ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க தனது வாழ்நாளில், மக்களுக்கு உண்மையையும், சமூக அநீதிகளையும், உள்ளதை உள்ளவாறு வெளிக்கொணரவும் பகிரங்கப்படுத்தவும் துணிச்சலாகவும் சாதுர்யமாகவும் அஞ்சாதும் செயற்பட்டவர். இதன் விளைவாக அவர் தனது உயிரைத் தியாகம் செய்யவும் நேரிட்டது.

நான் மீண்டும் மீண்டும் தற்போதைய ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கிறேன். நீங்கள் தற்போது ஜனாதிபதி, உங்களை ஜனாதிபதியாக்கும் பயணத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு விதமான பங்களிப்புகளை வழங்கிய லசந்த விக்கிரமதுங்கவுக்கும், அவரது மனைவி உட்பட பிள்ளைகளுக்கும் குடும்பத்தினருக்கும் கடமையை நிறைவேற்றுங்கள்.

லசந்தவின் கொலையாளிகள் யார் என்பது தொடர்பில் பாரபட்சமற்ற விசாரணையை நடத்துங்கள். குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துங்கள். நீதியை, நியாயத்தையும் நிலை நாட்டுங்கள்.

இந்த நாட்டின் ஜனநாயகத்தின் தூணான சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பது ஜனாதிபதியின் பொறுப்பு. லசந்தவின் கொலையாளிகள் யார் என்பதைத் தேடுவதற்குத் தயவு செய்து நடவடிக்கை எடுங்கள்.

லசந்த விக்ரமதுங்கவின் கொலையாளிகள் தொடர்பாக எமது ஆட்சியில் முறையான வழிமுறையின் கீழ், பக்கசார்பற்ற, வெளிப்படைத் தன்மை வாய்ந்த முறைமையினுள் நாம் கண்டறிவோம். அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துவோம். லசந்த விக்ரமதுங்கவுக்கும், அவரது குடும்பத்தின் சகலருக்கும் நீதியை நியாயத்தை நிலைநாட்டுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.–என்றார்.

# சிங்கள நடிகைக்குப் பாலியல் தொல்லை; சந்தேகத்தில் பொலிஸ் பரிசோதகர் கைது!



சிங்கள நடிகை ஒருவருக்குப் பாலியல் தொல்லை செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் கடமையாற்றும் பொலிஸ் பரிசோதகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான பொலிஸ் பரிசோதகர் 42 வயதுடையவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட நடிகை நேற்று முன்தினம் இரவு சந்தேகத்துக்கு உரிய பொலிஸ் பரிசோதகர் செலுத்திச் சென்ற ஓட்டோவில் பயணம் செய்துள்ளார்.

சந்தேகநபர் பிலியந்தலை ஜாலியா கொட பிரதேசத்தில் ஓட்டோவை நிறுத்தி நடிகையிடம் தவறாக நடந்துக் கொண்டுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் அந்த நடிகை பிலியந்தலை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே சந்தேகத்துக்கு உரிய பொலிஸ் பரிசோதகர் இவ்வாறு கைது செய் யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பிலியந்தலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தொலைத் தொடர்பு ஆணைக் குழு அங்கீகரித்த கைபேசிகளை வாங்குக!

## நுகர்வோருக்கு விசேட அறிவிப்பு

இலங்கைத் தொலைத் தொடர்பு ஒழுங்கு முறை ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளை மாத்திரமே வாடிக்கையாளர்கள் கொள்வனவு செய்ய வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கையடக்க தொலைபேசிகளை கொள்வனவு செய்வோருக்கு இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு வழங்கியுள்ள விசேட அறிவித்தலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் மோசடியில் சிக்குவதைத் தடுக்க, சர்வதேச மொபைல் சாதன அடையாள IMEI எண்ணைச் சரிபார்க்குமாறு ஆணைக்குழு மக்களிடம் கோரியுள்ளது.



IMEI எண் என்பது சர்வதேச மொபைல் சாதன அடையாள எண் ஆகும். இது அனைத்து கையடக்கத் தொலைபேசிகளுக்கும் ஒதுக்கப்பட்ட தனித்துவமான 15 இலக்க எண்ணாகும்.

IMEI என டைப் செய்து இடைவெளி விட்டு 15 இலக்கங்கள் கொண்ட IMEI எண்ணை 1909இற்கு அனுப்புவதன் மூலம் IMEI எண்ணின் செல்லுபடியை சரிபார்க்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்போது குறித்த கையடக்க தொலைபேசி பதிவு செய்யப்பட்டதா இல்லையா என்று உடனடிப் பதில் செய்தி வரும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




# பொலிஸார் மோப்ப நாய்களுடன் விசேட சோதனை நடவடிக்கை

யாழ்ப்பாணம் அரச பஸ் நிலையம் மற்றும் எழுதுமட்டுவாள் ஆகியவற்றில் பொலிஸாரால் மோப்ப நாய்களுடன் விசேட சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யுத்திய 2024 சின்னம் பொறித்த ஸ்ரிக்கர்களும் ஒட்டப்பட்டுள்ளன.

இந்த சோதனை நடவடிக்கையானது நேற்று (08) மாலை இடம்பெற்றுள்ளது.

யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத்தின் வழிகாட்டலில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விஷாந்தவின் கீழ் அதிரடிப் படையினருடன் இணைந்து மோப்ப நாய்களுடன் பொலிஸார் இந்தச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது பஸ்களில் பயணிகள் சோதனையிடப்பட்டு போதைப் பொருள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கான தொலைபேசி இலக்கங்களும் வழங்கப்பட்டன. பஸ்களில் யுத்திய 2024 சின்னம் பொறிக்கப்பட்ட ஸ்ரிக்கர்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

எழுதுமட்டுவாள் பகுதியிலும் நேற்று (08) பேருந்துகளை வழி மறித்து விசேட சோதனைகள் இடம்பெற்றுள்ளன.

# ஹபரணை விபத்தில் நால்வர் படுகாயம்!

ஹபரணையில் வான் மற்றும் லொறி ஒன்றுடன் ஒன்று மோதியதில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு நோக்கி சென்ற வான், லொறி ஒன்றுடன் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்து நேற்று (08) இரவு இடம்பெற்றுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த நால்வரும் படுகாயமடைந்துள்ளன நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் ஹபரனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# மூன்று பிள்ளைகளின் தந்தை மட்டக்களப்பில் சடலமாக மீட்பு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு உட்பட்ட மாமாங்கம் பிரதேசத்தில் 44 வயதுடைய கூலித் தொழிலாளியான ரஞ்சித்குமார் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை மாலை இவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவரின் மரணம் சம்பந்தமான மட்டக்களப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# போதைப் பொருளுடன் மூவர் நிந்தவூர் பொலிஸாரால் கைது!

(பாறுக் ஷிஹான்)

போதைப் பொருள்களைச் சூட்சும மாகத் தம்வசம் வைத்திருந்த மூவரை நிந்தவூர் பொலிஸார் கைது செய்துள் ளனர்.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேசத்தில் நேற்று திங்கட் கிழமை (8) மாலை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்ட விசேட சுற்றி வளைப்பின் போது பெருந்தொகையான பணம், போதைப் பொருள்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி ஏ.எம். நஜீப் வழிநடத்தலில் இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இந்தச் சுற்றி வளைப்பானது இன்று காலையிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

கைது செய்யப்பட்ட 32, 33, 34 வயதுடைய 3 சந்தேக நபர்களிடம் தொடர்ந்தும் மேலதிக விசாரணை களைப் பொலிஸார் முன்னெடுத்துள் ளனர்.



நாடு முழுவதும் விசேட போதை பொருள் ஒழிப்பு திட்டத்தை அமுல்படுத் தும் வகையில் பதில் பொலிஸ் மா அதிபரால் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தி யட்சகர்களுக்கு பணிப்புரை விடுக் கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம். என். ஜயபத்ம ஆலோசனை யில் நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி ஏ.எம். நஜீப் வழிநடத்த லில் மேற்கொள்ளப்பட்டு வருகின் றது.

# 98 நட்சத்திர ஆமைகள் முத்துராஜவெலவில் மீட்பு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நீர்கொழும்பு , முத்துராஜவெலவில் கடத்தி வரப் பட்ட அரிதான 98 நட்சத்திர ஆமைகள் கைப்பற்றப் பட்டன.

கடத்திவரப்பட்ட 98 நட்சத்திர ஆமைகள் முத்துராஜவெலயில் கைப்பற்றப்பட்டுள்ளது டன்,சந்தேக நபர்களும் நீர்கொழும்பு பொலிஸ ரால் கைது செய்யப்பட்டு நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

ஆமைகள் நீதிவானின் உத்தரவின் பேரில் கோணவெல விலங்கு பாதுகாப்பு நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

பேரதெனிய கால்நடை அபிவிருத்தி சுகாதார திணைக்கள உத்தியோஸ்தர்களின் பரிசோதனைக்கு ஆமைகள் உட்படுத்தப்பட்டன.

இந்த ஆமைகள் விற்பனைக்காகக் கடத்தி வரப் பட்டிருக்கலாம் என்று கண்ணொருவ கால்நடை அபிவிருத்தி சுகாதார ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.



## கொட்டித் தீர்க்கும் மழையால்

# மீளவும் திறக்கப்படும் இரணைமடுக் குளம்

(ந.லோகதயாளன்)

இரணைமடுக் குளத்துக்கான நீர் வரத்துப் பகுதியில் மீண்டும் மழை பொழிவதால் இரணைமடுக் குளம் மீண்டும் திறக்கப்படவுள்ளது.

இரணைமடுக் குளத்தில் 35 அடியை தாண்டிய நிலையில் நீர் தேக்கப்பட்டு கதவுகள் பூட்டப்பட்டிருந்தபோதும் தற்போது குளத்துக்கான நீர் வரத்துப் பகுதியில் அதிக மழை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதில் கனகராயன் குளத்தின் கீழ் மட்டும் 90 மில்லிமீற்றர் மழை பொழிவு ஏற்பட்டதோடு தொடர்ந்தும் மழைக்கான ஏதுநிலை காணப்படுகின்றது.

இதேநேரம் இரணைமடுக் குளமும் அதன் கொள் அளவான 36 அடியைத் தாண்டி 36 அடி 3 அங்குலமாக நீர் காணப்படுவதால் குளத்தீன் நீர் மீண்டும் திறந்து விடப்படவுள்ளது என்று அதன் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.


தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு
கட்டைக்காடு சென்மேரீஸ் விளையாட்டு கழக
ஏற்பாட்டில் DAN TV யின்
அனுசரனையுடன்



வடமராட்சி கிழக்கில்
03வது மாபெரும்
பட்டத் திருவிழா
2024

காலம் : 16.01.2023 (செவ்வாய்கிழமை)
நேரம் : பிற்பகல் 2.00 மணி
இடம் : கட்டைக்காடு சென்மேரீஸ் விளையாட்டுக் கழக மைதானம்

தங்களின் கற்பனைத்திறனுக்கு எம் மண்ணில் ஓர் அங்கீகாரம் தமிழரின் பண்பாட்டு கலையை எம்முடன் சேர்ந்து கொண்டாடி பணப்பரிசில்களையும் வெற்றி பெற்று தைபொங்கலை கொண்டாடுங்கள்.



முதலாம் பரிசு 100,000/=
இரண்டாம் பரிசு 50,000/=
மூன்றாம் பரிசு 25,000/=



பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு உங்கள் பதிவுகளை உறுதிப்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்

றஜனி : 077 843 5381 தயாபரன் : 077 152 9308

ஏற்பாட்டுக்குழு



# மண்முனைப்பற்றில் 19 பேருக்கு நிரந்தர காணி அனுமதிப் பத்திரம்

நீண்டகாலமாகத் தற்காலிக காணி அனுமதிப் பத்திரங்களுடன் வாழ்ந்த மட்டக்களப்பு, மண்முனைப்பற்று மக்களுக்கு நிரந்தர காணி உறுதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

1981 மற்றும் அதற்கு முன்னுள்ள காலப் பகுதிகளில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராக காணப்பட்ட இராஜதுரை, மண்முனைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இராஜதுரை கிராமம், செல்வா நகர் உள்ளிட்ட பகுதிகளில் வாழ்ந்த காணி அற்ற மக்களுக்கு அரச காணிகளை பகிர்ந்தளித்திருந்தார்.

இந்தக் காணிகளில் சுமார் 40 வருடங்களுக்கு மேலாக தற்காலிக காணி அனுமதிப் பத்திரங்களுடன் வாழ்ந்து வந்த நிலையில் அந்த மக்கள் மாவட்ட அபிவிருத்திக் குழுவிலும், பிரதேச அபிவிருத்திக் குழுவிலும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சி.சந்திரகாந்தனிடம் தொடர்ந்து கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர்.

இந்த நிலையில் அந்தக் காணிகளில் முதற்கட்டமாக 19 பேருக்கு நிரந்தர காணி உறுதிப்பத்திரங்கள் நேற்று வழங்கப்பட்டன.

மண்முனைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் வைத்து இவை வழங்கப்பட்டன. பிரதேச செயலாளர் சத்தியானந்தி தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சி. சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பத்திரங்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் தற்போதைய கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக செயலாளருமான பூ.பிரசாந்தன், மண்முனைப்பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவைகள் உத்தியோகத்தர்கள், பயனாளிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





### அம்பாறை மாவட்டத்தில் தொடரும் அடை மழை:

# சேனநாயக்க சமுத்திரத்தின் வான் கதவுகள் ஐந்து திறப்பு!

(எம்.ஏ.றமீஸ்)

அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் அடை மழை காரணமாக இந்த மாவட்டத்தின் சேனநாயக்க சமுத்திரத்தின் வான் கதவுகள் ஐந்து திறக்கப்பட்டு அதன் மூலமாக ஐந்தரை அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இதனால் அம்பாறை மாவட்டத்தின் தாழ் நிலப் பிரதேசங்கள் ஆபத்தான பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன என அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில தினங்களாக அம்பாறை, மொனராகலை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக அம்பாறை சேனநாயக்க சமுத்திரத்தின் நீர் மட்டம் வெகுவாக உயர்வடைந்துள்ளது. இதன் காரணமாக இந்தச் சமுத்தரத்தின் 110 அடி கொள்ளளவின் 106 அடி நீர் தற்போது நிறைந்துள்ளது.

சேனநாயக்க சமுத்திரத்தில் நிறைந்து வரும் நீர் மட்டத்தைக் குறைக்கும் வகையில் ஒரு செக்கனுக்கு 5 ஆயிரத்து 105 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகின்றது.

கல்லோயா ஆற்றின் மூலம் அதிகளவிலான நீர் வெளியேற்றபட்டு வருவதால் அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஆற்றை அண்டிய பிரதேசங்கள் மற்றும் நீரோடைகள் போன்றவற்றின் அருகில் வசித்து வரும் மக்களை மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று 24 மணித்தியாலங்களில் அம்பாறை மாவட்டத்தின் றூபஸ் குளம் பகுதியில் 270 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த மாவட்டத்தின் இங்கினியாகல பகுதியில் 133.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், அக்கரைப்பற்று பிரதேசத்தில் 108.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், தீகவாபி பிரதேசத்தில் 104.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், இலுக்குச்சேனை பகுதியில் 100.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், பன்னலகம பகுதியில் 96.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், எக்கல் ஓயா பிரதேசத்தில் 94.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அக்கரைப்பற்று, இறக்காமம், அட்டாளைச்சேனை, ஆலையடிவேம்பு, சம்மாந்துறை, காரைதீவு, நிந்தவூர், சாய்ந்தமருது மற்றும் அம்பாறை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் தாழ்நிலப் பகுதிகளில் வசித்து வரும் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் வெள்ள நிலைமையின்போது நீர் வாழ் உயிரினங்கள், விஷ ஜந்துக்களின் தாக்கம் போன்றன அதிகளவில் நிகழக் கூடிய நிலைமை காணப்படுவதால் மக்களைப் பாதுகாப்பாக இருக்குமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.







# பொதுத் தேர்தலில் நிச்சயம் கூட்டணி அமைப்போம்!

## அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவிப்பு



"பொதுத்தேர்தலில் கண்டிப்பாக கூட்டணி அமைப்போம். கூட்டணி முடிவை நான் பார்த்துக் கொள்கி றேன். தேர்தல் கூட்டணி முடிவானதும் அ.தி.மு.க. வேடர்பாளர்களை இறுதி செய்யலாம்."

– இவ்வாறு அ.தி.மு.க. பொதுச்செய லாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகை யிலேயே அவர் மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்.

சென்னையில் உள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் இன்று அக்கட்சியின் மாவட்ட செயலாளர்கள் கூட்டம் இடம்பெற்றுள்ளது. அந்த கூட் டத்தில் மக்களவை தேர்தல் தொடர்பாக விவாதிக்கப்பட்டதாக அ.தி.மு.க. தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி தலைமையில் மாவட்ட செயலாளர்கள், அ.தி.மு.க. தலைமைக் கழக நிர்வாகிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர். மக்களவை தேர்த லுக்கான பணிகளை முழுவீச்சில் மேற்கொள்வது குறித்து இந்தக் கூட்டத் தில் ஆலோசிக்கப்பட்டது.

அ.தி.மு.க. தரப்பில் ஏற்கனவே வாக்களிப்பு நிலைய குழு அமைக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனினும், பல்வேறு மாவட்டங்களில் வாக்களிப்பு நிலைய குழுக்கள் இன்னும் முழுமையாக அமைக்கப்படவில்லை என்று புகார்கள் எழுந்தன. வாக்களிப்பு நிலைய குழுவுக்கான காலக்கெடு முடிந்த நிலையில், இன்றைய தினத்தில் இதுதொடர்பாக விவாதிக்கப்பட்டது என்றும் சொல்லப்பட்டுள்ளது.

மக்களவைத் தேர்தல் இன்னும் ஒருசில வாரங்களில் அறிவிக்கப்படலாம். அ.தி.மு.கவை பொறுத்தவரை இந்த தேர்தல் முக்கியமான ஒன்றாக பார்க் கப்படுகிறது.

ஏனென்றால், அ.தி.மு.க. பொதுச் செயலாளராக பழனிசாமி பொறுப்பேற்ற பிறகு சந்திக்கக்கூடிய முதல் தேர்தல் என்பதால், வெற்றியை பெற்றாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

எந்தெந்த தொகுதிகளில் யாரை நிறுத்துவது என்பது போன்ற ஆலோ சனைகளும், அதற்கு தேவையான பணிகளை மேற்கொள்ள சில உத்தர வுகளை பழனிசாமி பிறப்பிக்கலாம் என்பதால் இன்றைய மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் அ.தி.மு.க. வட்டாரத்தில் முக்கியத்துவம் நிறைந்த ஒன்றாக கருதப்படுகிறது.

# மக்களவைத் தேர்தலில் ரேபரேலி தொகுதியில் சோனியாவுக்கு பதிலாக ராகுல் போட்டியிடுகிறார்

மக்களவை தேர்தலுக்கான அறிவிப்பு விரைவில் வெளியாக உள்ளது. இதற்கு முன்பாக அரசியல் கட்சிகள் தங்கள் தொகுதிகளில் பிரச்சாரங்களை துவக்கத் தயாராகி வருகின்றன.

இவற்றில் முக்கியத் தலைவர்கள் போட்டியும் கூர்ந்து கவனிக்கப்பட்டு வருகிறது. காங்கிரஸின் முன்னாள் தேசியத் தலைவரான சோனியா காந்தி, கடந்த 2004 முதல் உத்தரபிரதேச மாநிலம் ரேபரேலியில் போட்டியிட்டு வென்று வருகிறார்.

முதுமை காரணமாக பிரச்சாரக் கூட்டங்களை குறைத்துக் கொண்ட இவர், தற்போது தேர்தல் போட்டியில் இருந்தும் விலக விரும்புவதாக கூறப்படுகிறது. இதனால் அவரது ரேபரேலி தொகுதியில் ராகுல் காந்தி போட்டியிடுவார் எனப் பேச்சுக்கள் எழுந்துள்ளன.

சோனியா காந்தி முதன்முறையாக கடந்த 1999 இல் கர்நாடகாவின் பெல்லாரி மற்றும் உத்தரப்பிரதேசத்தின் அமேதியில் போட்டியிட்டு வென்றிருந்தார். இதில் பெல்லாரி எம்.பி. பதவியை இராஜினாமா



செய்த அவர் அமேதி எம்.பி. பதவியில் தொடர்ந்தார்.

2004 தேர்தலில் முதன்முதலாகக் களம் இறங்கிய தனது மகன் ராகுலுக்காக அவர் அமேதியை விட்டுக் கொடுத்தார். பின்னர் அருகிலுள்ள மற்றொரு காங் கிரஸ் களமான ரேபரேலிக்கு மாறினார். இந்த தொகுதியில் குறைந்தது 3 லட்சம் வாக்குகளில் வென்று வந்தார். இந்த வாக்கு வித்தியாசம் கடந்த 2019 தேர்தலில் 1.67 லட்சமாக குறைந்தது. எனினும் இந்த எண்ணிக்கையும் அதிகம் என்பதால் ரேபரேலியில் ராகுல் போட்டியிடும் வாய்ப்புகள் உள்ளன.

கடந்த தேர்தலில் இரண்டு தொகுதி களில் போட்டியிட்ட ராகுல், கேரளாவின் வயநாடு எம்.பி.யானார். அவர் 3 முறை வென்ற அமேதியில் மத்திய அமைச்சரான ஸ்மிருதி இரானியிடம் தோல்வியுற்றார். இதனால் காங்கிரஸ /க்கு உத்தரப்பிரதேசத்தின் செல்வாக்கும் குறைந்தது. எனவே எதிர்வரும் தேர்தலில் அவர் வயநாட்டுடன் ரேபரேலியிலும் போட்டியிடும் திட்டம் உள்ளார் என தெரிகிறது.

ரேபரேலி இல்லை என்றால் அதில் சகோதரி பிரியங்காவும், அமேதியில் மீண்டும் ராகுலும் போட்டியிடும் வாய்ப் புகள் உள்ளன. காந்தி குடும்பத்தின் சொந்த மாநிலமான உத்தரபிரதேசத்தில் பிரியங்காவுக்கு ஒரு காலத்தில் பெரும் எதிர்பார்ப்பு இருந்தது. அப்போது தேர்தல் போட்டிக்கு கட்சியினரின் அழைப்பை பிரியங்கா மறுத்து விட்டார். இந்த முறை அவர், உத்தரபிரதேசத்தில் அமேதி அல்லது ரேபரேலியுடன் தெலுங் கானாவிலும் ஒரு தொகுதியை தேடி வருகிறார் என தகவல்கள் வெளியா கின்றன.

# ஈராக் வைத்தியசாலையில் தீ விபத்து: குழந்தைகள் நால்வர் உயிரிழப்பு!



ஈராக்கின் தெற்கு பகுதியில் உள்ள திவானியா நகரில் பெண்கள் மற்றும் குழந்தைகள் சிறப்பு வைத்தியசாலையில் நேற்று மாலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் ஒரு பகுதியில் பற்றிய தீ, அடுத்தடுத்த அறைகளுக்கும் வேகமாக பரவியது.

இதனையடுத்து தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து, பல மணி நேரம் போராடி தீயை கட்டுப்பட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இந்த விபத்தில் 4 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர். 20 இற்கும் மேற்பட் டோருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வைத்தியசாலையில் உள் நோயாளிகளாக சேர்க்கப்பட்டி ருந்த 150 நோயாளிகள் வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்த நிலையில், அலட்சியமாக இருந்த வைத்தியசாலை அதிகாரிகளை பணிநீக்கம் செய்யும்படி ஈராக் பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

# பங்களாதேஷ் பொதுத் தேர்தல் நியாயமாக நடைபெறவில்லை!

## - அமெரிக்கா குற்றச்சாட்டு

பங்களாதேஷ் பொதுத் தேர்தல் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடைபெறாததால் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு ஐந்தாவது முறையாக ஆட்சிக்கு வருவதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளதாக அமெரிக்கா தெரி வித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் ஏனைய கண் காணிப்பாளர்களின் கருத்துக்களுக்கு அமைய இந்த அறிக்கை வெளியிடப் பட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்கள பேச்சாளர் மேத்யூ மில்லர் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷில் தேர்தலின் போதும் அதற்கு முன்பும் நடந்த வன்முறைகளை கண்டிப்பதாகவும், அதற்கு அந்த நாட்டு அரசாங்கமே பொறுப்பு என்றும் அமெரிக்கா கருத்து தெரிவித்துள்ளது.

பங்களாதேஷில் தேர்தல் நாளில்



ஆயிரக்கணக்கான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள் ளமை மற்றும் முறைகேடுகள் பற்றி கவலை கொண்டுள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை நேற்று வெளியிட்ட ஒரு செய்தி அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

எவ்வாறாயினும், சுதந்திரமான மற்றும் திறந்த இந்து - பசிபிக் பிராந்தியத்திற்கான கூட்டுப் பார்வையை முன்னேற்றுவதற்கு பங்களாதே/டன் தொடர்ந்து பணியாற்ற நம்புவதாக அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பங்களாதேஷில் இடம் பெற்ற பொதுத்தேர்தல் ஒரு மோசடி, ஏமாற்று நாடகம் என எதிர்க்கட்சி விமர் சித்துள்ளது.

பிரதமர் ஷேக் ஹசீனா தொடர்ந்து நான்காவது தடவையாக வெற்றி பெற்றுள்ளார். 300 நாடாளுமன்ற தொகுதிகளுக்கான தேர்தலில் 223 ஆசனங்களை ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சி வெற்றிபெற்றுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.